சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 12/2023

பெயர் திரு. சிவகுமார் நாள். 11.08.2026
த/பெ. சண்முகம்

**பிரதிவாதிகள் சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

( குறுக்கு விசாரணை தொடங்கும் நேரம் 11.59 மு.ப )

1. வாதி வழிக் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி வழிக் கோரும் நிலத்தின் புலஎண் 6/4L. அது என் மாமியார் தெய்வானை பெயரில் உள்ளது. அந்த சொத்தை நான் தான் பயிர் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தெய்வானை பெயரில் பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை. பி.த.சா.ஆ.1 பட்டாக்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த பட்டா நிலங்கள் வழியாக வாதி வரலாம் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வாதி சொத்திற்கு வடக்கே என் நிலம் உள்ளது என்றால் இல்லை. அ அட்டவணை சொத்து புலஎண் 5/6 க்கு வடக்கே எனக்கு சிறிய நிலம் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா.ஆ.2 புல வரைபடபடி அ அட்டவணை சொத்திற்கு வடக்கே ஆ அட்டவணை சொத்து உள்ளது என்றால் சரியல்ல. சிறிய நிலம் தான் உள்ளது.

2) அந்த நிலத்திற்கு வடக்கே வேம்பு நிலம் உள்ளது. அந்த நிலத்திற்கும் வடக்கே ஏரிக்கரை உள்ளது என்றால் வாதி நிலம் தான் உள்ளது. வாதி தன் நிலத்தில் நெற்பயிர் வைத்துள்ளார். வழக்கு நிலத்தில் வாதி மரங்கள் வைத்துள்ளார். அந்த நிலங்களில் வாதி உளுந்து மற்றும் நிலக்கடலை பயிர் செய்துள்ளார் என்றால்

எனக்கு தெரியாது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு வாதி அதில் நெற்பயிர் வைத்துள்ளார் என்றால் சரிதான். அப்போழுது வாதி என் நிலம் வழியாக சென்று வந்துள்ளார் என்றால் இல்லை. என் நிலம் வழியாக செல்லாம் என்றால் இல்லை. வாதி என் நிலம் வழியாக சென்று பயிர் வைத்து வந்தார் என்றால் சரியல்ல. என் நிலம் கரம்பாக இருக்கும்போது வாதி என் நிலம் வழியாக செல்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. என் நிலத்தின் வரப்பின் மீது வாதி நடந்து செல்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. 2023 ல் வாதி என் நிலம் வழியாக செல்லகூடாது என்று தகராறு செய்தேன் என்றால் என் நிலத்தில் சவுக்கு மரம் பயிர் செய்ததால் செல்லக்கூடாது என்று கூறினேன். அதன் பிறகு வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். அதன்மீது விசாரணை செய்து நீதிமன்றத்தை நாடுமாறு கூறினார்கள் என்றால் சரிதான்.

3) வாதி காலம் காலமாக என் நிலம் வழியாக சென்று வருகிறார் என்றால் சரியல்ல. 2023 ல் வழியை தடுப்பதால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக வாதி அவ்வாறு செல்லவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சொத்தின் நான்கு புறமும் என் சொத்து தான் உள்ளது என்றால், ஒரு பக்கம் மட்டும் தான் உள்ளது. வழிவிடக் கூடாது என்பதற்காக வீண் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை முடியும் நேரம் 12.22 பி.ப )

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை